திருப்பூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் திரு.மீ.உதயகுமார் எம்.எஸ்.சி.எம்.எட்.,

ப.மு.எண் 6015/அ1/2024 நாள். 01.07.2024.

பொருள்: தமிழ்நாடு பள்ளிக் கல்வி - அமைச்சுப்பணி - திருப்பூர் மாவட்டம், துங்காவி அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.ந.திருநாவுக்கரசு என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்து ஆணை வழங்குதல் சார்பு.

பார்வை: 1. அரசு ஆணை எண் 151 பள்ளிக் கல்வி(வரவு-செலவு)த் துறை நாள். 09.09.2022

2. திருப்பூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 6585/அ1/2023 நாள். 16.11.2023.

3. துங்காவி, அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியரின் கடித ந.க.எண். 53/2024 நாள். 19.06.2024.

**************************

பார்வை 2 இல் காணும் செயல்முறையின்படி பதிவறை எழுத்தர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்று தற்போது திருப்பூர் மாவட்டம், துங்காவிஅரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ந.திருநாவுக்கரசு என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக் கோரி பார்வை 3ல் கண்டுள்ள துங்காவி அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பரிந்துரையுடன் கருத்துருக்கள் பெறப்பட்டுள்ளது.

தலைமையாசிரியரின் பரிந்துரையின் அடிப்படையில் கீழ்க்காணும் நிபந்தனைகளின்படி பணிவரன் முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | பெயர்/பதவி/அலுவலகம் | பணி நியமன நாள் மற்றும் நியமன முறை | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 01. | திரு.ந.திருநாவுக்கரசு, இளநிலை உதவியாளர். அரசு உயர் நிலைப் பள்ளி, துங்காவி. திருப்பூர்மாவட்டம் | 17.11.2023 முற்பகல் (பதவி உயர்வு) | 17.11.2023 முற்பகல் |

Scanned with OKEN Scanner

நிபந்தனைகள்

1. பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தொடர் முடித்த பின்னரே தகுதிகாண் பருவ ஆணை விளம்பப்படும்.
2. துறைத் தேர்வுகள் 2 ஆண்டு காலத்திற்குள் தேர்ச்சி பெற வேண்டும்.
3. மேற்காண் பணியாளர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியினை முடித்து அதற்குரிய அனைத்து தேர்வுகளிலும் தேர்ச்சி பெற வேண்டும்.
4. தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் 5 ஆண்டு காலத்திற்குள் தேர்ச்சி பெறாவிட்டால் தனியர் மீது தமிழ் நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்)சட்டம் 2016 ன் பிரிவு 31 மற்றும் 33ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் .
5. இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் தகுதிகாண் பருவ ஆணை விளம்பப்பட்ட பின்னரே வழங்கப்படும்.

மேற்கண்ட பணியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விபரத்தினை சம்மந்தப்பட்ட பணியாளரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளவும் பணிப்பதிவேடு பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதல் அனுப்பி வைத்திட சம்மந்தப்பட்ட பள்ளி தலைமயாசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு

பணிப்பதிவேடு 1 தொகுதி

6.8.24

முதன்மைக் கல்வி அலுவலர்

திருப்பூர்

01/08/24

பெறுநர்

திரு.ந.திருநாவுக்கரசு,

இளநிலை உதவியாளர்.

அரசு உயர் நிலைப் பள்ளி,

துங்காவி. திருப்பூர்மாவட்டம்.

நகல்:

தலைமையாசிரியர் , அரசு உயர்நிலைப் பள்ளி,துங்காவி,திருப்பூர்மாவட்டம்.

Scanned with OKEN Scanner